2nd November 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

கொள்ளலாம் என்று இருக்கிறது. அதே முறையில் நாமும் ஏற்படுத்திக் கொள்ளலாம் என்று இங்குள்ள உரிமைக்குழு தங்கள் சிபாரிசைத் தெரிவித்திருக்கிறார்கள். அதையும் நான் படிக்கின்றேன்.

'However to prevent such instances occurring in future it seems to the Committee that it would be desirable that necessary steps should be taken by the Government to demarcate the area, say up to the War Memorial on the south, the Reserve Bank buildings on the north and the Band Practice road on the west, and no processions or demonstrations should be allowed to be held in these areas except with the prior written permission of the Commissioner of Police during the period when either House of the Legislature actually meets and sits. Specific instructions should also be issued to the concerned that whenever any trouble is apprehended sufficient steps should be taken to see that members are not molested or obstructed while they are coming to or going from the House.

என்று சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. இதையொட்டி போலீசார் வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இது ஒத்திவைப்புப் பிரேரணைக்குரியதல்ல என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : Consent is withheld.

(2) INCLUSION OF SALEM PLANT IN THE FOURTH PLAN

* திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, சேலம் உருக்காலையை நம்முடைய மாநிலத்தில் விரைவில் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக, அதைப்பற்றி விவாதிப்பதற்காக நான் ஒத்திவைப்புப் பிரேரணை ஒன்று கொடுத்திருக்கிறேன். சேலம் உருக்காலையை இந்த மாநிலத்தில் ஏற்படுத்த வேண்டும் என்பதில் இந்த அரசாங்கத்திற்கு எவ்வளவு பொறுப்பு இருக்கிறது என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. அதே நேரத்தில், இப்போது, இது இவ்வளவு அவசரமாக வரவேண்டியதன் காரணம் என்ன, அதற்குரிய எமர்ஜென்சி என்ன என்பதைத்தான் இந்த மன்றம் பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சமீபத்தில் மத்திய அமைச்சரவை, இந்தியாவில் எங்கெங்கு உருக்காலைகளை ஏற்படுத்துவது என்பதைப்பற்றி முடிவு செய்ததில், சேலம் உருக்காலையைப்பற்றி எந்தவிதமான உறுதிப்பாடும் காணப்படவில்லை. அதே சமயத்தில், போராட்டங்கள் நடத்தினால், அல்லது ரயிலை நிறுத்தினால், பலாத்காரம் விளைவித்தால் ஒருவேளை உருக்காலை வரலாமோ என்கின்ற எண்ணங்களும் பலருடைய மனதில் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட செயல்களின் காரணமாக அங்குள்ள முதலமைச்சர் அவர்கள் பிரதம மந்திரிக்கு தொலைபேசி மூலமாக மக்களுடைய கருத்தைத் தெரிவிக்கக் கூடிய சூழ்நிலையும், பிளேனில் சென்று நேராக பிரதம மந்திரியிடத்தில் மக்களுடைய கருத்தைத் தெரிவிக்கின்ற முறையும், பாதுகாக்கப்படுகிறது என்கின்ற ஒரு உறுதிப்பாடு இப்போது

ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. நம் முதல் அமைச்சர் அவர்களுடைய கடமை என்ன, பணி என்ன என்பதைப்பற்றி விவாதித்தால் நன்றாக இருக்கும். நம் முதல் அமைச்சர் அவர்கள் தொலைபேசியில் பேசினார்களா, இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்களா என்று தெரியவில்லை. அவர்கள் அடிக்கடி வலியுறுத்தி வருகிறார்கள் என்றாலும், இந்தச் சமயத்தில் பலாத்காரத்திற்குப் பயந்து, வேறு மாநிலத்தில் நடக்கக் கூடிய புரட்சிக்குப் பயந்து இந்தக் கோரிக்கையை விட்டுவிட இருக்கிறார்களா என்பது 1967-ம் ஆண்டு தேர்தலை ஒட்டியது. இதைப் பற்றி நம் மன்றம் ஒரு முடிவுக்கு வருவது, மத்திய அரசாங்கம் ஒரு முடிவுக்கு வருவது, இதைப் பற்றி விவாதிப்பது பொருத்தமானது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

*** கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, சேலம் உருக்காலை கிடைப்பதில்லை என்று முடிவு செய்யப்பட்டிருந்தால் இந்த மாதிரியான அவசரப் பிரேரணைக்கு அவசியம் இருக்கலாம். இல்லை என்று ஏற்பட்டுவிட்டால் இதைப் பற்றி விவாதிக்க வேண்டும் என்று சொல்லலாம். இது வரையில் அந்த மாதிரி உத்தரவு வரவில்லை, ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்று சொல்லப்படவில்லை, ஆகவே, இது அவசரப் பிரேரணைக்கு உரியது இல்லை என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இது விட்டுவிடப் படவில்லை. அப்போதைக்கப்போது இந்த மன்றத்திலே அரசாங்கம் தெரிவித்துக்கொண்டிருக்கிறது. தொடர்ந்து இதிலே கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. ஏதோ சேலம் உருக்காலை என்றால், கடையில் போய் வாங்கி வருவதில்லை. வேறு நாட்டிலிருந்து கொண்டுவருவதில்லை. எவ்வளவோ சிக்கல்கள் இருந்திருக்கின்றன. சிக்கல்கள் தீர்ந்துகொண்டு வருகின்றன. நெய்வேலி பழுப்பு நிலக்கரியை வைத்து, சேலத்தில் இருக்கிற இரும்பைச் சேர்த்து ஒரு உருக்காலை ஏற்படுத்தவேண்டும். பல நிபுணர்கள், பல நாட்டு நிபுணர்கள் தொடர்ந்து ஆராய்ந்து, பல அறிக்கைகள் தயாரித்து, அவை வந்திருக்கின்றன. அவைகளெல்லாம் மத்திய அரசாங்கத்திடம் இருக்கின்றன; திட்டக் கமிஷனிடம் இருக்கின்றன. ஆனால், சேலம் உருக்காலையை அவசியம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது இந்த அரசாங்கம் தொடர்ந்து வற்புறுத்திக்கொண்டு இருக்கின்ற விஷயம்தான். எனக்குத் தொலை பேசி வேண்டியதில்லை. நேராகவே பேசியிருக்கிறேன். நேருக்கு நேராகப் பேசியிருக்கிறேன். நேருக்கு நேராகப் பேச வில்லை என்றால்தான் தொலைபேசி, தந்தி எல்லாம் வேண்டும். பேசியிருக்கிறேன் என்றால், பேசி காரியம் முடிந்த நிலையில் இருக்கிறது. நான் பிரதமர் அவர்களிடம் பேசியிருக்கிறேன்; சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் பேசியிருக்கிறேன்; திட்டக் கமிஷனிடம் பேசியிருக்கிறேன். அவர்களும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு விசாகையிலே கிளர்ச்சி இருப்பதைப் பற்றிக் கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள். என் கிளர்ச்சி இருக்கிறது? சேலம் எல்லாம் சேர்ந்திருக்கிறது என்றுதான் கிளர்ச்சி. அதைக்

2nd November 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

கனம் அங்கத்தினர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். இப்போது மத்திய அரசாங்கத்தில் காபினெட் சப்-கமிட்டி ஒன்று அமைக்கப் பட்டிருக்கிறது. நாம் சொல்வதெல்லாம், 'ஹாஸ்பெட்டில் கேட்டால் கொடுங்கள், வேண்டாமென்று சொல்லவில்லை; விசாகையில் கேட்டால் கொடுங்கள் வேண்டாமென்று சொல்லவில்லை; சேலம் கட்டாயம் வேண்டும்' என்பதுதான். 'எல்லாம் தயாராக இருக்கிறது, நல்ல திட்டம், கட்டாயமாக எடுத்துக் கொள்ளவேண்டும்' என்றுதான் வற்புறுத்திக்கொண்டு வருகிறோம். ஆகையால், சேலம், ஹாஸ்பெட், வைசாக் ஆகிய இந்த மூன்று திட்டங்களை என்ன செய்வது, எப்படி நிறைவேற்றுவது, என்ன முடிவு செய்வது என்பது பற்றி ஆராய காபினெட் சப்-கமிட்டி போட்டிருக்கிறார்கள் அதிலே சேலம் இருக்கிறது, ஹாஸ்பெட் இருக்கிறது, வைசாக்கும் இருக்கிறது. வைசாக்தான் இருக்கிறதே, பிறகு ஏன் கிளர்ச்சி செய்கிறார்கள் என்றால், எல்லாவற்றையும் விட்டுவிட்டு வைசாக்கில் பெரிய திட்டம் வேண்டும் என்றுதான். பெரிய திட்டம் என்றால் அதற்கு அதிகமான பணம் வேண்டும். அது மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தது. அதிலே வைசாக்கும் இருக்கிறது. மூன்றையும் எடுத்துக் கொள்ளுவதை எதிர்த்துக் கிளர்ச்சி இருப்பது மாதிரி தோன்றுகிறது. ஆகவே, சேலம் வருகிறது, தொடர்ந்து இந்த அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது. ஆகையால், இது அவசரப் பிரேரணைக்கு உரியது இல்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : Consent is withheld.

IV.—STATEMENT BY CHIEF MINISTER ON LAND REVENUE.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, During the general discussion in the Legislature on the Budget Estimates for the year 1966–67 and on some earlier occasions, I had referred to the need, in the long term, for rationalisation of the existing system of land revenue and other ancillary cesses and sur-charges on land. The case of rationalisation has in fact been urged with varying degrees of vehemence over the last several decades, both prior to and after Independence. While every one readily concedes that the existing system of land revenue is regressive in its incidence and does not satisfy the well accepted canons of taxation, no reform of the existing system has been seriously attempted because of the very complexity of the problem. The present system of land revenue is very ancient in its origin and on this system as it has evolved over the years have been superimposed cesses and surcharges levied by local bodies and the State Government. These *ad hoc* imposts have rendered attempts at reformation of the existing system progressively more difficult.

The time has now come when we should study the problem of incidence of land revenue in all its aspects and find and enduring and equitable solution. All our plans for economic development rest on agricultural production and it is widely recognised that